**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் II - 2024**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் கட்டம் II இன் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ADB) இலங்கை சனநாயக சோசலீச குடியரசிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 27 ஆம் திகதிய 3483 எஸ்ஆர்ஐ மற்றும் 3484 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.04 ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலீச குடியரசிற்கும் ஏஜென்ஸ் பிரன்சியஸ் டி அபிவிருத்திக்கும் இடையில் கைச்சாட்ட 2018 ஒக்தோபர் 17 ஆந் திகதிய சீஎல்கே 1022 01 கே ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 03 ஆம் உறுப்புரையின் 3.4.4 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம், மின்சக்தி மற்றும் சக்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் பரிமாற்ற வினைத்திறனான உட்கட்டமைப்பு தரமுயர்த்தல், நடுத்தர வேல்டேச் வலையமைப்பின் வினைத்திறனான முன்னேற்றம் மற்றும் மின்சக்தி நோக்கத்திற்காக கேள்வி வழி முகாமைத்துவ முன்னேற்றம் போன்ற பிரதான 03 கூறுகளின் கீழ் அமுலாக்கப்பட வேண்டுமென்பதே செயற்திட்ட நடவடிக்கைகளாக உள்ளன. கடன் உடன்படிக்கைப் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 39,808 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 260 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 27,985 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 180 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏஜென்ஸ் பிரன்சியஸ் டி அபிவிருத்தியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 11,823 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 80 மில்லியன் தொகை இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பாரர்க்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2017 யூலை 10 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், நிகழ்ச்சிதிட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2024 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1. செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டமானது (அ) பரிமாற்ற உட்கட்டடைப்பு தரமுயர்ததல் (ஆ) நடுத்தர வோட்டேச்சின வினைத்திறான முன்னேற்றம் (இ) வினைத்திறனான மின்சக்திக்கான கேள்வி வழி முகாமைத்துவத்தின் முன்னேற்றம் என்ற பெயருடைய 03 கூறுகளை கொண்டுள்ளது.. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மேற்குறித்த (அ) மற்றும் (ஆ) இற்காக 13 பொதிகளின் கீழ் அமுலாக்கப்பட்டிருந்தன. மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக பரிமாறற வலையமைப்பிற்காக உப பாகங்கள் மற்றும் கருவிகளான பொருட்கள் / உபகரணங்கள் மீளாய்வாண்டின் போதான சேமிப்புகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவற்றின் மீது பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரைகள் |
|---|---|---|
| பொதி 2 லொட் B2 இன் கீழ் 132 KV, 25 கிமீ பாதுக்க – ஹொரண பரிமாற்ற வழிகளின் 2019 பெப்ரவரி 28 இல் ஐ.அ.லொர் 3,835,437 கிரயத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் 04 தடவைகள் 710 நாட்களால் நீடித்தலின் பின்னர் 2024 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்குவாற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தமானது 70 சதவீதத்தல் சிவில் வேலைகள் மற்றும் பொருத்துதல் வேலைகள் மிகுதி வேலைகள் அகற்றுவதன் மூலம் 2024 சனவரி 04 இல் நோக்கெல்லை குறைக்கப்பட்டிருந்துடன் ஐ.அ.டொலர் 2,798,112 ஒப்ந்த விலையை திருத்தி CEB ஆல் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், கடன் பெறுகைகளில் ரூபா 954.98 மில்லியன் கிரயத்தில் வெளிநாட்டிலிருந்து வழங்கப்பட்ட பொறி மற்றும் கட்டாய உப பாகங்கள் ஒப்பந்தகாரரின் களஞ்சியத்தில் இருந்து CEB இற்கு கையளிக்கப் பட்டிருக்காததுடன் CEB ஆல் 2025 யூன் 02 இல் கணக்காய்வு திகதி வரையும் மிகுதி வெலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஆகவே, செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நொக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை. | மிகுதி நிர்மாண வேலைகள் CEB இல் வேறுபட்ட கிளைகளிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இதன்படி, களஞ்சிய மெய்மையாய்வு பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் பொருட்கள் 2025 யூலை அளவில் கையளிக்கப்பட வேண்டியிருந்ததுடன் மிகுதி செயற்திட்ட வேலைகள் 2026 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்க வேண்டியிருந்தது. | செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்கு மிகுதி வேலைகளிற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **பொதி 12-லொட் A**<br>பொதி 12 –லொட் A இன் கீழ் வழங்குநரிடமிருந்து 220 மஎ வெளித்தேற்ற கதவு சுவீச் பலகை மற்றும் அலுமினிய ரீயுபிலர் பூச் பாரின் வழங்கல் மற்றும் விநியோகத்திற்காக ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் 07 ஆம் பிரிவின் உட்பிரிவின் பிரகாரம் வழங்குநர் ஒப்பந்தம் வழங்கல் அறிவித்தல் 28 நாட்களிற்குள் ஒப்பந்த வழங்கல் தொகைளில் மற்றும் மேற்குறித்த ஒப்பந்தத்திற்காக ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனைகளின் (SCC) குறிப்பிட்டப்பட்ட நாணயத்தில் செயலாற்றல் பிணைமுறி வழங்க வேண்டும். எவ்வாறாயினும், வெளிநாட்டு பகுதி சீஎன்லை 207,701 இற்காக அத்தகைய செயலாற்றல் பிணைமுறி 65 நாட்களின் பின்னர் 2024 பெப்ரவரி 01 இல் சமர்ப்பிக்கப் பட்டிருந்ததுடன் ரூபா 435,000 இன் உள்ளூர் பகுதிகளிற்கான வங்கி வரைவு 2023 நவம்பர் 27 இல் ஒப்பந்தம் வழங்கல் அறிவித்தலிருந்த 153 நாட்டகளின் பின்னர் 2024 ஏப்ரல் 29 இல் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தம் 2023 நவம்பர் 27 இல் வழங்கப்பட்டிருந்தது.<br>ஒப்பந்தகாரர் 2024 திசெம்பர் 21 இல் வேண்டப்பட்ட கால அட்டவணைக்கு பிந்தியுள்ள 2024 பெப்ரவரி 01 இல் செயலாற்றல் பிணைமுறையை சமர்ப்பித்திருந்தது. சவால்கள் காரணமாக பிணை முறி சமர்ப்பித்தலிற்காக 2024 சனவரி 22 வரை 28 நாட்கள் நீடித்தை ஒப்பந்தகாரர் வேண்டியிருந்தார். அவர்கள் இலங்கையில் எதிர்பாராமல் வீழ்ச்சியடைந்த பொருளாதார நிலை காரணமாக வங்கியிலுந்து பிணைமுறிகள் பெறுவதில் சவால்களிற்கு முகம்கொடுக்கின்றன. | சொல்லப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளுடன் கடுமையாக இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | **பொதி 8 லொட் B**<br>பொதி 8 லொட் B இன் ரூபா 225.99 மில்லியன் மிகுதி முன்னேற்ற கொடுப்பனவு நேரடிக் கொடுப்பனவுகள் மற்றும் விசெட நாணயக் வங்கிக் கணக்கு ஊடாக 2024 செப்தெம்பர் 05 இல் பெறப்பட்ட ரூபா 163.54 மில்லியன் மற்றும் 2025 சனவரி 10 இல் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 119,500 என்பவற்றிற்கு முறையே 003BGTEE2402141 ஆம் இலக்க மற்றும் 003BGTEE2401447 ஆம் இலக்க செயலாற்றல் பிணை முறிக்கு எதிராக அத்தகை ஒப்பந்த நிபந்தனைகளில் உள்ளடக்கப் பட்டிருக்காத நேரடிக் கொடுப்பனவுகள் மற்றும் விசேட வெளிநாட்டு வங்கி கணக்கு உடாக ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட சமர்ப்பிக்கப்பட்டிருந்த 06 | கடன் முடிவுறுத்லிற்கு முன்னர் செயற்திட்ட பொறியியலாளர் AGM (செயற்திட்டங்கள்) ADB கடன் முழுமையாக பயன்படுத்தலுடன் ஒப்பந்தகாரரால் சமர்ப்பக்கப்பட்ட தகுதியுடைய வங்கி உத்தரவாதங்களில் திருத்தவதற்றும் விடுவிப்பதற்கும் CEB இல் தேவையற்ற நிதி செலவுகளை தவிர்ப்பதற்கும் அனுமதிக்கப்பட்டது. | சொல்லப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளுடன் கடுமையாக இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பட்டியல்களில் ஒப்பந்தாகரருக்க செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | மேற்குறிப்பிட்ட ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் பிணைமறி பிரகாரம் 2025 மார்ச் 31 வரை ரூபா 163.54 மில்லியனிற்காக பெறப்பட்டிருந்ததுடன் ஆரம்பத்தில் 2024 செப்தெம்பர் 30 வரை மாத்திரம் தகுதியுடைய ஐ.அ.டொலர் 199,500 இற்காக பிணைமுறி பெறப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. எதிராக இது 2025 சனவரி 10 இலிருந்து 2025 மார்ச் 31 வரையாக காலத்திற்காக புதிய பிணைமுறியாக பெறப்பட்டிருந்தது. ஆகவே செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (PMU) நிர்மாண காலப்பகுதியை இன்னமும் தெடந்திருப்பினும் ஐ.அ.டொலர் பகுதிக்காக செலாற்றல் பிணைமுறியை பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | PMU ஆனது ஐ.அ.டொலர் 199,500 வங்கி உத்தரவாதம் காலாவதியாவதற்கு முன்னர் நீடிப்பதற்கு ஒப்பந்தகாரர் வேண்டியிருந்தார். இதனால், ஒப்பந்தகாரர் அவர்களுடைய டொலர் கணக்குடன் பிரச்சனைகள் காரணமாக நீடிப்புகள் தாமதமாக்கப்பட்டிருந்தது என ஒப்பந்தகாரர் அறிவித்திருந்தார். | முழுக் காலப் பகுதியையும் மேவுவதற்கு செயலாற்றல் பிணை முறியை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | **பொதி 09**<br>ஐ.அ.டொலர் 46,349.19 இற்கு சமமான ரூபா 13.86 மில்லியன் தொகை அத்தகைய ஒப்பந்த நிபந்தனைகளில் உள்ளடக்கப்படாத செயற்திட்டத்தின் இறுதியில் 2024 யூலை 25 ஆந் திகதிய 792718 ஆம் இலக்க காசோலை மூலம் பெறப்பட்ட முற்பண கொடுப்பனவு உத்தரவாதங்களிற்கு எதிராக 2024 ஆகஸ்ட் 26 இல் விசேட வெளிநாட்டு நாணய வங்கி கணக்கின் ஊடாக மிகுதி சிவில் வேலைகள், பொருத்துதல் மற்றும் ஏனைய சேவைகளிற்காக 2024 யூன் 19 ஆந் திகதிய SC109/INV/EREC/29/LKR ஆம் இலக்க பட்டியலிற்காக ஐ.அ.டொலர் 46,349.19 இற்கு சமமான ரூபா 13.86 மில்லியன் தொகை ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | இது CEB இல் மேலதிக நிதிச் செலவுகளை தவிர்ப்பதற்கு முன்னைய வேலைகளிற்கு பூர்த்தியாக்குவதற்கு பின்பற்றப்பட வேண்டிய சிறந்த நடைமுறையாக இருந்தமையால் CEB இல் நிதி நிலமையை கருத்திற்கொண்டு ADB கடன் முழுமையாக பயன்படுத்தலின் நொக்கத்துடன் செய்யப்பட்டிருந்தது. | சொல்லப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளுடன் கடுமையாக இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | ரூபா 13.86 மில்லியன் பெறுமதியுடைய சிவில் வெலைகள், பொருத்துதல் மற்றும் ஏனைய சேவைகள் என்பவற்றின் மேற்குறிப்பிட்ட மிகுதி வேலைகளில் ரூபா 4.70 மில்லியன் பெறுமதியான வேலைகள் 2025 சனவரி 02 ஆந் திகதிய TEC அறிக்கை பிகாரம் பின்னர் வேலையின் நோக்கெல்லையிலிருந்து | ஒப்பந்தகாரின் காசோலை மூலம CEB இன் பொது முகாமையாளரிற்கு வழங்கப்பட்ட ரூபா 13.86 மில்லியன் CEB கணக்குகளில் ரூபா 4.70 மில்லியன் தொகை இருந்த ஏற்கனவே வைப்பச் செய்யப்பட்டிருந்தது. 2025 சனவரி 02 இல் செய்யப்பட்ட TEC தீர்மானம் அந்நேரத்தில் நிலவிய | செயற்திட்ட நிதிகள் வினைத்திறனான வழியில் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் முற்பணமாக ஒப்பந்தகாருக்கு மொத்த தொகையும் ஏற்கனவே விடுவிக்கப்பட்டது என அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால் ADB கடன் பெறுகைகளின் ரூபா 4.70 மில்லியன் தொகை உரிய செயற்திட்டத்திற்காக பயன்படுத்தாமல் CEB இல் விடப்பட்டிருந்தது. | முறைமை நிபந்தனைகளின் அடிப்படையில் இருந்தது. | |
| (ஊ) உட்பிரிவு 24.5 இன் பிரகாரம் செயற்திட்ட முகாமையாளர் ஏதேனும் குறைபாடுகள் மற்றும் / அல்லது குறைபாடுகள் இருந்தால் ஒப்பந்தகாரருக்கு எழுத்து மூலமாக தெரிவித்து வசதிகள் அல்லது அதன் அந்த பகுதி பூர்த்தியாக்கப்பட்டதை உறுதி செய்வதற்கு பூர்த்தியாக்கல் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் எவ்வாறாயினும் குறைபாடுகளை திருத்தாமல் பொதி 09 இன் மின்சார வெலைகளில் 43 குறைபாடுகள் மற்றும் சிவில் வெலைகளில் 270 குறைபாடுள் என்பவற்றுடன் ஒப்பந்த நிபந்தனைகளின் 24 ஆம் உட்பிரிவினை தொடர்ந்து 2024 யூன் 10 இல் பூர்த்தியாக்கல் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. | பூர்த்தியாக்கல் சான்றிதழ் வழங்கும் நெரத்தில் ஒப்பந்தகாரர் வசதிகளின் குறித்த செயற்பாடுகளிற்காக தேவைப்பட்ட சகல பரீட்சிப்பு மற்றும் தொடங்குதலை பூர்த்திசெய்திரந்தது. (சுகதானாவி 350 ஆறு மின்பொறி இணைப்பு) எனவே, பூர்த்தியாக்கல் சான்றிதழ் வசதிகள் குறித்த செயற்பாடுகளை செய்யப்பட முடியுமென இயலுவதற்கு இணைக்கப்பட்ட குறைபாட்டு பட்டியலுடன் வழங்கப்பட்டது. | ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் குறைபாடுகளை திருத்தவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 நிதிகளின் பயன்பாடு**

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்தவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை மின்சார சபையால் செயற்திட்ட காலப்பகுதியின் பொது 3483 ஆம் கடன் இலக்கத்தின் கீழ் ரூபா 112.02 மில்லியன் கடப்பாட்டக் கட்டணங்கள் ஏற்பட்டிருந்ததடன் ERD கூற்றின் பிரகாரம் கடப்பாட்டுக் கட்டணங்கள் ரூபா 72.62 மில்லியனிற்கு சமமான யூரோ 325,984 செயற்திட்டத்தின் சார்பில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் ஏற்பட்டிருந்தது. ஆகவே, பயன்படுத்தப்படாத பாதீட்டு ஒதுக்கீடுகளில் ஏற்பட்ட கடப்பாட்டு கட்டணங்களின் ஒரு பகுதி சிக்கனமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | பல்வெறு சந்தர்ப்பங்கள் மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களால் செயற்திட்ட நீடிப்புகள் தகுதி மற்றும் நியாயமான காரணங்களிற்காக வழங்கப்பட்டிருந்தது. இதன்படி கடப்பாட்டு கட்டணங்களின் ஏற்படல் அந்த நிபந்தனைகளின் கீழ் தவிர்க்க முடியாதிரந்தமை அவதானிக்பபட்டது. | மேலதிக கிரயங்களை குகைக்கும் நொக்கில் தாமதமில்லாமல் ஒதுக்கப்பட்ட நிதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |